II ADDL COURT, TRICHY

DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :139/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -2 (LW -2)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.வேல்முருகன்** | Caste | : | |
| Father Name | : | **திரு.ஆதிமூலம்** | Calling | : | **முதல்நிலை காவலர்** |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **08.06.2026.**

**PW - 2 (LW -2 )**

(எதிரி ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் திருச்சி, நவல்பட்டு காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2025–ம் தேதி நவல்பட்டு காவல் நிலைய ஆய்வாளர் பிரதீபா, காவலர் சதீஸ்குமார் என்பவருடன் நான் ரோந்து அலுவலகாக இலந்தப்பட்டி, சின்ன சூரியூர், பெரியசூரியூர் பகுதிகளில் ரோந்து செய்த பொழுது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பெரிய சூரியூர் வடக்கு தெருவில் உள்ள ஒரு கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக தகவல் கிடைத்தது.

அந்த தகவலின் பேரில் அந்த கடைக்கு சென்று சோதனையிட்ட போது அந்த கடையின் உரிமையாளர் முத்துசாமி, த/பெ.ராஜு என்பவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான 263 ஹான்ஸ் பாக்கெட்டுகள், 300 விமல் பாக்கு பான் மசாலா வைக்கப்பட்டிருந்ததை

கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களான ஹான்ஸ், விமல் பாக்கு பான் மசாலா ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தினால் உடன் இருந்த காவலரும் நானும் சாட்சியாக கையெழுத்திட்டோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எ.த.கு.வி</u> :

| | |
|---|---|
| **கேள்வி** | ரோந்து பணிக்கு காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினீர்கள்? |
| **பதில்** | மதியம் 14.30 மணிக்கு. |
| **கேள்வி** | ரகசிய தகவல் உதவி ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு வந்தது? |
| **பதில்** | மாலை சுமார் 16.30 மணி. |
| **கேள்வி** | ரகசிய தகவல் எங்கு இருந்த பொழுது கிடைத்தது? |
| **பதில்** | சின்னசூரியூரில் ரோந்து பணியில் இருந்த பொழுது. |
| **கேள்வி** | தகவல் கிடைத்தவுடன் எத்தனை மணிக்கு பெரிய சூரியூருக்கு சென்றீர்கள்? |
| **பதில்** | மாலை சுமார் 16.50 முதல் 16.55 மணிக்குள் சென்றோம். |
| **கேள்வி** | குறிப்பிட்ட கடையில் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்வதாக தகவல் வந்ததா? அல்லது அந்த பகுதிகளில் உள்ள கடைகளில் விற்பனை செய்வதாக தகவல் வந்ததா என்றால்? |
| **பதில்** | எனக்கு தெரியாது. உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். |
| **கேள்வி** | தகவல் கிடைத்தவுடன் எதிரி கடைக்கு சென்ற பொழுது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள்? |
| **பதில்** | எதிரி மட்டும் தான் கடையில் இருந்தார். |
| **கேள்வி** | எதிரியின் கடை யாருக்கு சொந்தமானது? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | எதிரியின் கடைக்கு அருகில் எத்தனை கடைகள் இருந்தது? |
| **பதில்** | கடை இல்லை. வீடுகள் இருந்தது. |

| | |
|---|---|
| **கேள்வி** | அந்த வீட்டில் உள்ள நபர்களை கூப்பிட்டு விசாரித்தீர்களா? |
| **பதில்** | யாரும் முன்வரவில்லை. |
| **கேள்வி** | எதிரியின் கடையில் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதாக பொது மக்கள் யாரும் புகார் கொடுத்துள்ளார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | ஹான்ஸ் பாக்கெட்டு என்ன கலரில் இருந்தது? |
| **பதில்** | ஹான்ஸ் பாக்கெட் மஞ்சள் கலரில் இருந்தது. |
| **கேள்வி** | தடை செய்யப்பட்ட பொருட்களான ஹான்ஸ், பான்மசாலா பாக்குகள் எவ்வளவு வாங்கப்பட்டது, அதில் எவ்வளவு விற்கப்பட்டது என்றால்? |
| **பதில்** | தெரியாது. |
| **கேள்வி** | நீங்கள் காவல் நிலையத்திலேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு தான் கடைக்கு சென்று ஆய்வினை மேற்கொண்டீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | கைப்பற்றுதல் மகஜரை எங்கு வைத்து எழுதினீர்கள்? |
| **பதில்** | கடையில் வைத்து. |
| **கேள்வி** | நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து தான் கைப்பற்றுதல் மகஜர் எழுதப்பட்டுள்ளது என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தீர்கள் என்றாலும்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் எழுதப்பட்டுள்ளதா? |
| **பதில்** | உள்ளது. |
| **கேள்வி** | கைப்பற்றுதல் மகஜரில் முதலில் தயார் செய்யப்பட்டதா? அல்லது முதல் தகவல் அறிக்கை முதலில் பதிவு செய்யப்பட்டதா? |
| **பதில்** | கைப்பற்றுதல் மகஜர் தான் முதலில் பதிவு செய்யப்பட்டது. |
| **கேள்வி** | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் குற்ற எண் தெரியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | உங்களுக்கு சம்பவம் பற்றி ஆய்வாளர் சொல்லி அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 08.06.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 08.06.2026

II ADJ COURT, TRICHY